**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.1/2020
Prosecution witness.9

| | |
|---|---|
| பெயர் : சீனிவாசன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02th day of April 2025.

<u>02.04.2025</u>

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.05.2019 ம் தேதி கீழத்தூவல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது செல்லூர் கிராமத்தை சேர்ந்த வேலு, த.பெ.ஆறுமுகம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்றேன்.

**2)** புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.43/2019 இதச பிரிவுகள் 304(A) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5).** முதல் தகவல் அறிக்கை அசலை முதுகுளத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.பென்சாம் ஆகியோரின் பார்வைக்கு வைத்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) கீழத்தூவல் காவல் நிலையத்திலிருந்து முதுகுளத்தூர் குற்றவியல் நீதிமன்றம் 10 கீ.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வாகனத்தில் வந்தால் 10

நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 27.05.2019 ம் தேதிதான் பெறப்பட்டது என்றால் சரிதான். புகார் மனுவிலோ முதல் தகவல் அறிக்கையிலோ சாட்சிகள் நாகராஜ் மற்றும் முருகன் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) முதல் தகவல் அறிக்கையில் 5 வது காலத்தில் சம்பவ இடம் திருவரங்க ஊருக்கு வடக்கே என்று உள்ளது என்றால் சரிதான். திருவரங்கம் ஊருக்கு வடக்கே சுமார் 13 கீ.மீட்டருக்கு பரமக்குடிக்கு நேரான ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதலில் கொடுத்த புகார் மனு மறைக்கப்பட்டு விபத்து இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.